[1992 மார்ச் 9

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் காலத்தில்தான் ஆதிதிராவிட மக்களுடைய கல்வித் தரத்தை உயர்த்த வேண்டும் என்பதற்காக இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் எஸ்.எஃப்.சி. அதாவது ஸ்டாண்டிங் ஃபைனான்ஸ் கமிட்டி நடக்கிறபோது, அவர்கள் கோரிக்கை வைக்காமலேயே இந்த ஆதிதிராவிட மக்களின் கல்வித் தரம் உயர்த்தப்படவேண்டுமென்று சொல்லி, அதற்காக நூல் நிலையத்தை உருவாக்கவேண்டும் என்று 12.5 இலட்சம் ரூபாயை ஒதுக்கித் தந்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அந்த அளவுக்கு எந்த அரசும் எடுக்காத அளவுக்கு நமது இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆதிதிராவிட மக்களிடத்திலேயிருந்து கோரிக்கை வராமலேயே, சிந்தித்துப் பார்த்து நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே இந்தக் கோரிக்கையையும் தமிழக முதல்வர் புரட்சித் தலைவியிடம் எடுத்துச் சொல்லி உரிய முறையில் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 10-40

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 138, திரு. மா. சுந்தரதாஸ், மாண்புமிகு மீனளத் துறை அமைச்சர்.

138—

மீன் வளர்ச்சிக் கழக தினச்சம்பள பணியாளர்களை நிரந்தரம் செய்தல்.

*765 திரு. மா. சுந்தரதாஸ் :

மாண்புமிகு மீனளத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்தில் பல ஆண்டுகளாக தினச்சம்பள அடிப்படையில் பணியமர்த்தப்பட்டு நிரந்தரம் செய்யப்படாமல் தொழிலாளர் இருப்பது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) ஆம் எனில், அவர்களின் பணி நாட்களை கணக்கில் கொண்டு தொழிலாளர் நல அடிப்படையில் அவர்களை நிரந்தரப் பணியமர்த்த அரசு முன்வருமா ?

1992 மார்ச் 9]

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்தின் பல்வேறு துறைகளில் மாதச் சம்பள அடிப்படையில் ஏற்படும் காலியிடங்களில் வாய்ப்புகள் ஏற்படும்போது அரசு விதிகளின்படி தகுதி வாய்ந்த தினக் கூலி பணியாளர்களை, மாத சம்பள அடிப்படையில் பணியில் அமர்த்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

திரு. மா. சுந்தரதாஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தினக் கூலியாக தமிழகத்திலே இந்த இலாகாவிலே எத்தனை பேர்கள் வேலை செய்கின்றார்கள்? எத்தனை ஆண்டுக் காலமாக வேலை செய்கிறார்கள் என்பதைப் பற்றி அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்தின் பல்வேறு அமைப்புகளில் சுமார் 58 பேர் பணியாற்றுகின்றார்கள். இது வரையில் 36 தினக்கூலிகள் மாத சம்பள அடிப்படையிலே பணியில் அமர்த்தப்பட்டிருக்கின்றார்கள் என்பதை இந்த அவைக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. மா. சுந்தரதாஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னையிலே மட்டும் இருக்கின்றவர்கள் நூற்றுக் கணக்கான பேர்கள் வேலை செய்து கொண்டிருக்கின்றார்கள். இவர்களை உடனடியாக நிரந்தரப்படுத்துவதற்கு ஏதாவது திட்டம் அரசிடம் உள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஊழியர்களின் கோரிக்கையானாலும் சரி, ஏழையெளியவர்களின் கோரிக்கையானாலும் சரி, அக்கோரிக்கைகளை கனிவுடன் கேட்டறிந்து உடனுக்குடன் உரிய நடவடிக்கைகளை எடுத்து தீர்க்க வேண்டும் என்ற ஆர்வத்துடனும் அக்கறையுடனும் செயல்படும் நமது வாழும் தெய்வத்தை வாழ்த்த வார்த்தைகளே இல்லை. புதிய பதவிகள் உருவாக்கப்படும் போதும் மாதச் சம்பள பணியிடங்கள் காலியாகும் போதும், தகுதி மற்றும் மூப்பு நிலை அடிப்படையில் தற்காலிக மற்றும் தினக் கூலிகள் ஆகியோர் அப்பணிகளில் அமர்த்தப்படுகின்றனர் என்பதை அறிவித்துக் கொள்கிறேன்.

சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS